NFTE Tamil Nadu Circle

# ஒப்பந்த ஊழியர் கிராக்கிப்படி



Com V V S Murthi

மத்திய தொழிலாளர் அமைச்சக அரசிதழ் வெளியீட்டின் படியான தின ஊதியம் மற்றும் கிராக்கிப்படிக்கான மே 20, 2009 உத்தரவை BSNL ஏற்றுள்ளது. இதற்கான BSNL உத்தரவு மே6, 2010 அன்று வெளியாகியுள்ளது. கிராக்கிப்படி கணக்கீட்டு முறை என்ன என்று சில மாவட்ட நிர்வாகங்கள் வினவுவதாக நமது தோழர்கள் தெரிவித்தனர். மூத்த தொழிற்சங்க தலைவர் விஜயவாடா வி வி எஸ் மூர்த்தி அவர்களின் வழிகாட்டலை பெற்று கீழ்கண்ட புள்ளி உயர்வுகளை தந்துள்ளோம்.

133 புள்ளிகளுக்கு மேல் உயர்வு எவ்வளவு என்பது பார்க்கப்பட்டு 0.90, 1.13, 1.35 பைசாவால் DA கணக்கிடப்படுகிறது. தின ஊதியமான 120, 150, 180 உடன் இந்த கிராக்கிப்படியும் சேர்த்து தரப்படவேண்டும் .

ஜனவரி 08- ஜூன் 2008 சராசரி 137 உயர்வு 4 புள்ளிகள்
1-10-08 முதல் (4*0.90=3.60, 4*1.13=4.52, 4*1.35=5.40) கிடைக்கும்.

ஜூலை 08- டிசம்பர் 08 சராசரி 146 உயர்வு 13 புள்ளிகள்.
1-4-09 முதல் (13*0.90=11.70, 13*1.13=14.69, 13*1.35=17.55) கிடைக்கும்

ஜனவரி 09- ஜூன் 2009 சராசரி 150 உயர்வு 17 புள்ளிகள்.

1-10-09 முதல் (17*0.90=15.30, 17*1.13=19.21, 17*1.35=22.95) கிடைக்கும்

ஜூலை 09- டிசம்பர் 09 சராசரி 165 உயர்வு 32 புள்ளிகள்
1-4-10 முதல் (32*0.90=28.80, 32*1.13=36.16, 32*1.35=43.20) கிடைக்கும்.

இன்று சென்னையில் 180+ 43.20= 223.20 அடிப்படையிலும்
கோவை மதுரையில் 150+ 36.16= 186.16 அடிப்படையிலும்
பிற பகுதிகளில் 120+ 28.80= 148.80 அடிப்படையிலும்
ஊதியம் வழங்கப்படவேண்டும். 1-10-08 முதல் நிலுவை கணக்கிட்டு( அவ்வப்போதுள்ள உயர்வுப்படி) தரப்படவேண்டும்

பாட்னா வந்திருந்த தொழிலாளர் அமைச்சரின் கவனத்திற்கு MOL உத்தரவை BSNL அமுல்படுத்துவதில்லை என்பதை சுட்டிகாட்டினோம்.கிராக்கிப்படி தரவேண்டும் என நாம் நடத்திய போராட்டம் பலனை தந்துள்ளது.

31-5-2010